# புன்னகையையும் மகிழ்ச்சியையும் அள்ளித்தரும் அனைவருக்குமான பாடசாலை



நாம் அந்த பாடசாலைக்குச் சென்ற சந்தர்ப்பத்தில், அங்குள்ள சிலைக்கருகிலுள்ள முற்றத்தில் பந்தடித்து அவர்கள் விளையாடிக்கொண்டிருந்தனர். அப்போது ஒரு குழந்தையின் பெயர் கூறி அழைக்கப்பட்டு, அவரை நோக்கி பந்து வீசப்பட்டது. அந்தப் பந்தை எட்டிப் பிடித்த குழந்தை, இன்னொரு குழந்தையின் பெயரைக் கூறி அழைத்து அவரை நோக்கி பந்தினை வீசியது. அவர்கள் அனைவரும் சிரித்து மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர்.

வேறு பணிகளுக்காக அவ்வழியாகச் செல்லும் மாணவர்களும் ஆசிரியர்களும் அந்தக் குழந்தைகளை உற்சாகப்படுத்திவிட்டுச் சென்றனர். சிலர், அந்தக் குழந்தைகள் தவறவிட்ட பந்துகளை எடுத்துக்கொடுத்து உதவினர்.

அவர்கள் அந்தப் பாடசாலையின் விசேட கல்விப் பிரிவின் மாணவர்கள் ஆவர். அவர்களுக்குள் டவுண் சிண்ட்ரோம்[1] என்றழைக்கப்படும் மனநலிவு நோய்க்குள்ளான மற்றும் சிறிதளவான அறிவுசார் குறைபாடுள்ள குழந்தைகளும் இருந்தனர்.

[1] Down syndrome is a genetic mutation. The condition is known as Down syndrome because it was discovered by John Langdon Down, a British medical specialist.

விசேட கல்விப் பிரிவிற்குப் பொறுப்பான சோமா அம்மணியின் வழிகாட்டுதலின் கீழ் குழந்தைகள் எவ்வாறு மகிழ்ச்சியுடன் விளையாட்டினையும் கலந்து கற்றுக்கொள்கின்றனர் என்பதை அந்த நாள் முழுவதும் நாம் அவதானித்தோம்.

"இந்த வருடத்துடன் நான் ஓய்வுபெறுகின்றேன். இந்த சேவையை செய்ய முடிந்ததில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்" என்றார் சோமா ஆசிரியர்.

விசேட கல்விக்கான ஆசிரியர் பற்றாக்குறை அந்த வலயத்தில் காணப்படுவதாக நாம் கேள்வியுற்றோம். சோமா ஆசிரியர் ஒரு பயிற்சிபெற்ற ஆரம்பநிலைக் கல்வி ஆசிரியர் ஆவார். தனது ஆரம்பநிலைக் கல்வி பயிற்சியுடன் விசேட கல்வி அறிவையும் சேர்த்து கற்றுக்கொண்ட சோமா, ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மூடும் நிலையில் இருந்த இந்த பாடசாலையின் விசேட கல்விப் பிரிவுக்கு புத்துயிர் அளித்தார். அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் விசேட கல்விக்குப் பொறுப்பான துறைசார் பணிப்பாளர்கள் ஆகியோரின் உதவியுடன் இது தொடர்பாக மேலும் பயிற்சிகளை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை பெற்றுக்கொண்டார்.

“பயிற்சி மாத்திரம் போதுமானதல்ல. அவர்கள் எம்மவர்கள் என நினைக்கும் பச்சாதாபத்தினை வளர்த்துக்கொள்ள வேண்டும்” என சோமா ஆசிரியர் கூறினார். “ஒரு தாயாக, எனது வகுப்பிலுள்ள குழந்தைகளது பெற்றோரை என்னால் புரிந்துகொள்ள முடியும். ஆகவே, என்னால் முடிந்த அதிகபட்ச சேவையினை வழங்க நான் முயற்சிக்கின்றேன்.”

பாடுதல், நடனம், சித்திரம் மற்றும் விளையாட்டுக்கள் போன்ற பல செயற்பாடுகள் ஊடாக இந்த வகுப்பிலுள்ள குழந்தைகளுக்கு எவ்வாறு எழுத்துக்கள், நிறங்கள், பெயர்ச்சொற்கள் மற்றும் ஆங்கில சொற்கள் என்பன கற்பிக்கப்படுகின்றன என்பதை நாம் அவதானித்தோம். ஆங்கில பாடத்திற்கு அதன் ஆசிரியையை வரவேற்கும் முகமாக அவர்கள் பாடலொன்றை பாடினர். நிறங்களுக்கான ஆங்கில சொற்களை கற்பிக்கும் செயற்பாட்டை அந்த ஆசிரியர் முன்னெடுத்தார்.

அவர்களது திறமையை மேம்படுத்துவதற்கு எளிமையான கைவினைப் பொருட்கள் மிகவும் அவசியமானதென ஆசிரியர் சுட்டிக்காட்டினார். கத்தரிக்கோலினைக் கொண்டு துணியை வெட்டவும், எளிய இயந்திரம் மூலம்

விளக்குத் திரிகளை உருவாக்கவும் அவர்கள் கற்றுக்கொள்ளும் விதத்தை நாம் அவதானித்தோம். இவ்வாறான செயற்பாடுகளுக்கு உதவுவதற்காக அந்த மாணவர்களின் பெற்றோரை பாடசாலைக்கு வரவழைப்பதற்கான அனுமதி, ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர் சோமா, ஆரம்பநிலைப் பிரிவின் தலைமை ஆசிரியராகவும் செயற்பட்டுள்ளதால், விசேட கல்விப் பிரிவிற்கு அவசியமான கூடுதல் ஆதரவை ஒருங்கிணைப்பது அவருக்கு இலகுவாக அமைந்துள்ளது.

விசேட கல்விப் பிரிவிற்கான இடத்தை தெரிவுசெய்யும் விடயத்தில், பாடசாலை நிர்வாகம் மிகவும் கரிசனையுடன் செயற்பட்டுள்ளதை நாம் அவதானித்தோம். ஆரம்ப வகுப்புகளைக் கொண்ட ஒரு கட்டிடத்தின் முனையில் இந்த பிரிவு காணப்பட்டதோடு, அங்கிருந்து நீர்க் குழாய்கள் மற்றும் மலசலகூடத்தை இலகுவாக அணுக முடியும். அத்தோடு, வெளிப்புற செயற்பாடுகளுக்கான வகுப்பறையை ஒட்டி ஒரு சிறிய முற்றமும் உள்ளது.

“எமது பாடசாலையில் இந்தக் குழந்தைகள் மிகவும் பிரபலமானவர்கள். அவர்களை யாரும் விலக்கி வைப்பதில்லை. இணைப் பாடவிதானங்களில் அவர்களுக்கு சமமான வாய்ப்புகளை வழங்குவதை நாம் எப்போதும் உறுதிசெய்கின்றோம்" என பாடசாலையின் அதிபர் குறிப்பிட்டார். “உதாரணமாக, ஒவ்வொரு நிகழ்விலும் அவர்களது பங்குபற்றுகை உள்ளடக்கப்பட்டுள்ளது. அவர்கள் பிரபலமாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணம். இவர்கள் விளையாட்டு போன்ற ஏனைய செயற்பாடுகளிலும் பங்கேற்கின்றனர்.”

பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற ஒரு நிகழ்வில், அவர்கள் எவ்வாறு ஒரு நாட்டுப்புற நாடகத்தை நிகழ்த்தினர் என்பதை டவுண் சிண்ட்ரோம் எனப்படும் மனநலிவு நோய்க்குள்ளான ஒரு சிறுவன் காட்டினார். ஆசிரியரின் கைத்தொலைபேசியிலுள்ள தரவுகளில் இருந்து அதனை கண்டுபிடித்து எம்மிடம் காட்டினார். தம்மைத் தாமே கவனித்துக்கொள்ளல், வீதியில் அவதானமாக நடந்துசெல்லல், பேருந்தின் பெயர்ப்பலகையை வாசித்தல், யோசனைகளை பகிர்ந்துகொள்ளல், தொழிற்பயிற்சிக்கு முந்தைய செயற்பாடுகளில் பங்கேற்றல் மற்றும் கணினிகளை பயன்படுத்துதல் போன்ற திறன்களை இவர்களுக்கு பாடசாலை வளர்த்துள்ளது.

பாடசாலையிலுள்ள சிறிய கணனி அறையில், இவர்களுக்கென ஒரு பாட அலகு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மாணவர்களுக்கு தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட பாடங்களை கற்பிப்பதாக தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் எங்களிடம் கூறினார்.

அன்றைய தினம் மாணவி ஒருவர் பாடசாலைக்கு வரவில்லை. அதற்கான காரணத்தை வினவினோம்.

“பொருளாதார பிரச்சினைகள் காரணமாக சில சந்தர்ப்பங்களில் பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில்லை. அவர்களை அழைத்துவருமாறு நான் தொலைபேசியின் மூலம் அறிவித்தேன். அவர்கள் இங்கே சந்தோசமாக இருக்கின்றனர். மகிழ்ச்சி என்பது அவர்களது வாழ்க்கையில் மிகவும் முக்கியமான விடயமாகும்” என ஆசிரியர் எம்மிடம் கூறினார்.

“எனது மகளுக்கு டவுண் சிண்ட்ரோம் எனப்படும் மனநலிவு நோய் உள்ளது. அவர் எமக்கு ஒரேயொரு குழந்தை. அவரை நான் எப்போதும் பாடசாலைக்கு அழைத்து வந்துவிடுவேன். முன்னர் நாம் பேருந்தில் பாடசாலைக்கு வந்தோம். இப்போது பேருந்துக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதால், அப்படியே பேசிக்கொண்டு நடந்து வந்துவிடுவோம்” என விசேட கல்விப்பிரிவில் கல்வி கற்கும் மாணவி ஒருவரின் தாய் எம்மிடம் குறிப்பிட்டார். அத்தோடு, ஏனைய பிள்ளைகளுடன் எவ்வாறு பேருந்தில் பயணிப்பதென்றும் தனது மகளுக்குத் தெரியுமென அவர் மேலும் கூறினார்.

அமைதி நிறைந்த அந்தக் கிராமப்புற பாடசாலை முழுவதும் நாம் அன்பை அவதானித்தோம். மேலும் மேலும் அன்பைப் பொழியும் இடமாக அந்த பாடசாலையின் விசேட கல்விப் பிரிவு காணப்படுகின்றது. டவுண் சிண்ட்ரோம் என்ற மனநலிவு நோயினால் பீடிக்கப்பட்ட ஒரு சிறுவன், நாம் புறப்படுவதற்கு முன்னராக எமக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் உரையொன்றை நிகழ்த்தினார்.

“எல்லா குழந்தைகளும் பாடசாலைக்கு செல்வதற்கும், கற்பதற்கும், அவர்கள் சிறந்து விளங்குவதற்காக திறன்களை வளர்த்துக்கொள்வதற்குமான நியாயமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு உள்ளடங்கல் கல்வி மிகவும் பயனுள்ள ஒரு வழிமுறையாகும். ஒரே பாடசாலையில், ஒரே வகுப்பறையில் எல்லா பிள்ளைகளும் கல்வி கற்பதை உள்ளடங்கல் கல்வி

குறித்து நிற்கின்றது. பாரம்பரியமாக விலகியிருந்த குழுக்கள் உண்மையாகவே கற்றுக்கொள்ளும் வாய்ப்பை இது குறிக்கின்றது," என யுனிசெஃப்[2] கூறுகின்றது.

கிராமப்புற பகுதியொன்றில் அமைந்துள்ள இந்தப் பாடசாலையானது, உள்ளடங்கல் கல்வியை புரிந்துகொள்ளும் கல்விச் சூழலுக்கு மிகச்சிறந்த உதாரணமாகும். இயலாமையுடைய சில மாணவர்கள், தமது சக மாணவர்களுடன் வேறு வகுப்புகளில் கல்வி கற்பதாக அதிபர் எம்மிடம் கூறினார். சகல மாணவர்களுக்கும் சமமான சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு அவசியமான அறிவும், திறன்களும், அணுகுமுறைகளும், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் உட்பட பாடசாலை சமூகத்தில் கட்டமைக்கப்பட்டிருப்பதை நாம் அவதானித்தோம். உள்ளடங்கல் கல்வியை நடைமுறைப்படுத்துவதற்கு, அது தொடர்பான விழிப்புணர்வு மிகவும் அவசியமாகும்.



[2] https://www.unicef.org/education/inclusive-education